செ.வெ.எண்: 735 DT.06.12.12


தமிழ்நாடு அரசு
தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம்
டி ஐ கட்டடம், கிண்டி, சென்னை 600 032
தொலை பேசி .044-22502411/22502412
E-mail: edichennai@gmail.com

Entrepreneurship
DEVELOPMENT INSTITUTE
GOVERNMENT OF TAMIL NADU


## நாளிதழ் செய்தி

சென்னையில் உள்ள தமிழக அரசின் தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனம், ICT நிறுவனம், மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம் (மதுரை) ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து "உயர்கல்வி நிறுவனங்களில் தொழில் முனைவோர் மேம்பாட்டு மையங்கள் அமைத்தல்" பற்றிய மாநில அளவிலான ஒரு கருத்தரங்கை வரும் டிசம்பர் திங்கள் 21ஆம் நாள் வெள்ளிக்கிழமை அன்று சென்னை நந்தம்பாக்கத்தில் அமைந்துள்ள சென்னை வணிக வளாகத்தில் (Chennai Trade Centre) நடத்த உள்ளது.

இந்த மாநாடு கல்வியாளர்களிடையே தொழில்முனைவோர் பயிற்சி பற்றிய விழிப்புணர்வையும் முக்கியத்துவத்தையும் உணர்த்துவதை நோக்கமாக கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களில் இந்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் உதவியோடு தொழில் முனைவோர் மேம்பாட்டு மையங்களை அமைப்பதற்கான உதவிகளை செய்வதையும், மற்றும் மாணவர்களிடையே தொழில்முனைவோர் ஆர்வத்தை வளர்க்கவும், வேலைத்திறன் வளர்ப்பு பயிற்சிகளை ஏற்படுத்தவும், இது தூண்டுகோலாய் அமையும்.

மாநிலத்தில் உள்ள உயர்கல்வி மற்றும் தொழில் கல்வி நிறுவனங்களை சார்ந்த கல்லூரி தலைவர்கள் / தளாளர்கள் / செயலர்கள் / முதல்வர்கள் / துறைத் தலைவர்கள் / ஒருங்கிணைப்பு அதிகாரிகள் ஆகியவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள அழைக்கப்படுகிறார்கள். தொழில் முனைவோர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சிதுறை மற்றும் அறிவியல், தொழில் நுட்பம் சார்ந்த மத்திய மாநில தலைமை அதிகாரிகள் தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் வெற்றிகரமான தொழில் முனைவோர்கள், இம்மாநாட்டில் விளக்க உரைகள் வழங்க இருக்கிறார்கள்.

இப்பெருமைமிகுந்த மாநாட்டில் கலந்துகொள்ள விரும்பும் நிறுவனங்கள், இயக்குநர் தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், டி.ஐ.கட்டிடம், ஜி.எஸ்.டி. சாலை, கிண்டி, சென்னை – 600 032 (தொ.பே.எண்: 044-22502411/12 Fax: 044-22502413, E.Mail: edichennai@gmail.com). என்ற முகவரியை அணுகலாம். பதிவு கட்டணம் ரூ.1000/- இப்பயிற்சிக்கான பதிவுப் படிவம் தொழில்முனைவோர் மேம்பாட்டு மையத்தின் வலைதளம்: www.editn.in என்ற முகவரியில் பதிவிறக்கம் செய்ய ஆவன செய்யப்பட்டுள்ளது. இப்படிவம் அனுப்ப இறுதி நாள்: 15.12.2012. இக்கால அவகாசத்திற்குள் பதிவுசெய்ய இயலாதவர்கள் மாநாடு நடைபெறும் வளாகத்தில் காலை 9.00 மணிக்குள் நேரடியாகவும் பதிவுசெய்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

இயக்குனர்
தொழில் முனைவோர்
மேம்பாட்டு நிறுவனம்
சென்னை.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9